சமூக நல ஆணையரக கூடுதல் இயக்குநர், சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.க.ஜெயலட்சுமி, M.A., M.Phil.,

செ.மு.ந.மு.எண் 1796/நிர.4(1)/2018 நாள்:-15.02.2019

பொருள்:– பணியமைப்பு – சமூக நல ஆணையரகம், சைதாப்பேட்டை, சென்னை15 – திருமதி.த.சுமித்ரா, இளநிலை உதவியாளர், மாவட்ட சமூக நல அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை பூர்த்தி செய்து ஆணை வழங்குவது – சார்பு.

பார்வை:– 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதம் எண்.5349/PSD-G1/2017 நாள்:-04.10.2017.
2. சமூக நல இயக்குநர், சென்னை–15 அவர்களின் செ.மு.ந.க.எண் 30216/நிர்4(3)/2017 நாள்:-30.10.2017.
3.மாவட்ட சமூக நல அலுவலர் (பொ), திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் ந.க.எண்.2053/அ1/2018 நாள்:-31.12.2018.

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திண்டுக்கல் மாவட்டம், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.த.சுமித்ரா என்பவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 28 (1)ன்படி இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 03.1.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2015–2016க்கான தொகுதி–IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் நீதிப்பேராணைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

திருமதி.த.சுமித்ரா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு:- பணிப்பதிவேடு

ஒம்/–க.ஜெயலட்சுமி
கூடுதல் இயக்குநர்

பெறுநர்
திருமதி.த.சுமித்ரா, இளநிலை உதவியாளர்,
மாவட்ட சமூக நல அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)

நகல்
1. மாவட்ட சமூக நல அலுவலர், திண்டுக்கல் மாவட்டம். (மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும், பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்).
2. இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி//

18/2/19
கண்காணிப்பாளர்.